**செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை திரு.ச.அருண்ராஜ் இ.ஆ.ப.,**

ந.க.34607-2013-அ3 நாள்.31.05.2024

பொருள் பொதுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு - கிராம உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.சேகர் என்பவர் 11.04.2011 அன்று பணியிடையில் காலமானதால் அவரது மகன் திரு.சே.வினோத்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்க 1.செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.34607-2013-அ3 நாள்.22.11.2022.

2. இவ்வலுவலக கடித ந.க. 34607-2013-அ3-நாள். 26.09.2023

3.அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள்.08.03.2023.

4.கூடுதல் தலைமைச் செயலர் - வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் கடித எண்.ஆ.கு.-3-4600-2024 - நாள்.20.02.2024.

5.கூடுதல் தலைமைச் செயலர் - வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் கடித எண்.ஆ.கு.-3-4600-2024 - நாள்.28.02.2024.

.....

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு, பொம்மராஜபுரம் கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 11.04.2011 அன்று காலஞ்சென்ற திரு.சேகர் என்பவரின் மகன் திரு.சே.வினோத்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கப்பட்டு தனியர் 23.11.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது அரசாணை(நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ-1) துறை நாள்.08.03.2023-ன்படி மாவட்ட நிர்வாகமே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் நபர்களுக்கு பணிவரன்முறை செய்யலாம் என பார்வை -4 ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்பேரில் கோப்பு

பரிசீலினை செய்யப்பட்டதில் தனியரின் பணி தொடர்பாக கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகிறது.

| வ. எண் | பணிவரன்முறை செய்வதற்கான தேவையான விவரங்கள் | பணிவரன்முறை செய்வதற்கு தனியரால் பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகள் |
|---|---|---|
| 1. | வயது வரம்பு | தனியர் 18-40 வயதிற்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் |
| 2. | விண்ணப்பிப்பதற்காக கால அளவு | தனியர் அரசு அலுவலர் காலஞ்சென்ற 3 ஆண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் |
| 3. | விண்ணப்பித்த நாளில் பெற்ற கல்வித்தகுதி | தனியர் விண்ணப்பித்த நாளில் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். |

எனவே, பார்வை 5-ல் காணும் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளபடி, தனியர் திரு.சே.வினோத்குமார் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்ய விதித்தளர்வுகள் ஏதும் தேவைப்படாத நிலையிலும், தனியர் மீது எவ்வித குற்றக்குறிப்பாணைகளும் நிலுவையில் இல்லாத நிலையிலும், அரசாணை(நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ-1) துறை நாள்.08.03.2023-ன்படி செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.சே.வினோத்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாளான 23.11.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/-ச.அருண்ராஜ்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு.

--உத்தரவின்படி--

Arun 31/05/2024

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்
நகல்
1.கூடுதல் தலைமைச் செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை - 5 ...... அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

31/5/24

2.சம்மந்தப்பட்ட அலுவலர்கள்...... தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும்.
3.மாவட்ட ஆட்சியரின் முகாம் எழுத்தர்
4.மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்
5.அ3 இருக்கை